**கவனிக்க.-** *2021.05.13 ஆந் திகதிய 2228 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* III *பிரசுரிக்கப்படவில்லை*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2229 - 2021 මැයි මස 21 වැනි සිකුරාදා - 2021.05.21

*2229 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II - சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சட்டங்கள் | - |
| சட்டமூலங்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - |
| கடனிறுக்க முடியாமைக்கான வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |
| பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| நொத்தாரிசுமார் பெயர்ப்பட்டியல் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 286 |
| பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, யூன் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


285- B 082232 - 353 (2021/05)

# நானாவித அறிவித்தல்கள்

## குடியியல் நியாயாக்கத்தைக் கொண்ட மேல் மாகாண மேல் நீதிமன்றத்தில்

(கொழும்பில் அமையப்பெற்றது)

ஒடுக்குவதற்கான விண்ணப்பம் இலக்கம் : 22/2021/CO

இல. 200 அம்பத்தலே வீதி. கிட்டம்பகுவ, வெல்லம்பிட்டியவில் அமைந்துள்ள (Classic Teas (Private) Limited) விடயத்திலும்

மற்றும்

*2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பகுதியின் கீழ் நீதிமன்றத்தினால் ஒடுக்குவதற்கான ஓர் விண்ணப்பம்.*

ஹற்றன் நஷனால் வங்கி PLC, HNB கோபுரம், இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்தை, கொழும்பு 10.

மனுதாரர்.

மேற்கூறப்பட்ட கம்பனியை மேல் மாகாண மேல் நீதிமன்றத்தினால் (கொழும்பில் அமையப்பெற்றது) ஒடுக்குவதற்கான மனு 2021 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி "ஹற்றன் நஷனல் வங்கி PLC, HNB கோபுரம், இல. 479, ரீ. பி. ஜயா மாவத்தை, கொழும்பு 10" என்பவரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதென்றும்,

குறித்த மனுவானது 2021 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆந் திகதி நீதிமன்றத்துக்கு முன் விசாரிக்க உத்தரவிடப்பட்டுள்ளதென்றும், மேற்குறித்த மனு சம்பந்தமாக மேற்குறித்த கம்பனிக்கு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவர் எவராவது குறித்த மனு தொடர்பில் கட்டளை பிறப்பிப்பதை ஆதரவு அல்லது எதிர்க்க விரும்பின் விசாரணையின்போது நேரடியாகவோ அல்லது அவரது சட்டத்தரணி மூலமாகவோ தோற்றலாம் எனவும் மேற்படி கம்பனிக்கு எந்தவொரு கடன் கொடுத்தவர் அல்லது பங்களிப்புச் செய்தவருக்குத் தேவைப்படின் மனுவின் ஒரு பிரதி கீழ் கையொப்பமிட்டவரினால் அதற்குரிய கட்டணத்தின்படி பணக்கொடுப்பனவின் பிரகாரம் வழங்கப்படுமெனவும் அறிவிக்கப்படுகின்றது.

T. D. எதிரிவீர,
மனுதாரரின் கட்டத்தரணி,
இல. 479, ரீ. பி. ஜாயா மாவத்த,
கொழும்பு 10.

**குறிப்பு.**- மேற்குறித்த மனுவின் விசாரணையின்போது நேரில் சமுகமளிக்க எவராவது நோக்கம் கொள்வதாயின் அவர் அதனின் நோக்க அறிவித்தலை எழுத்தில் தெரிவித்து மேற்குறித்த சட்டத்தரணியான திரு. T. D. எதிரிவீர அவர்களுக்கு நேரடியாக பதிவுத் தபால் மூலம் சேர்ப்பிக்க வேண்டும். குறித்த அறிவித்தல் நபர்களின் பெயர்கள் மற்றும் விலாசங்கள் அல்லது கம்பனியாக இருப்பின் கம்பனியின் பெயர் மற்றும் விலாசம் அல்லது அவர்ளுக்கு/ அவருக்கு பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி இருப்பின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணியின் பெயர் என்பவற்றைக் குறித்து மேற்குறித்தவருக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அனுப்பப்படுவதாயின் போதியகால அவகாசத்துடன் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

T. D. எதிரிவீர,
மனுதாரரின் சட்டத்தரணி.

05-395

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.